Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# Women's Life in *Periyapuranam*

**Dr. M. Vijaya Saratha,** Assistant Professor ofTamil, Anna Adarsh College for Women, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-8858 -5853**
**DOI: 10.5281/zenodo.14752710**

## Abstract

*All devotional literature sings the praises of God, but only the Periyapuranam sings the devotional excellence of those who are devoted to Lord Shiva. Periyapuranam shows us the love that the devotees have for God and the lengths to which they went to express that love. If we take the meaning of the word "length" superficially here, there is no doubt that there will be difficulties in understanding the lives of women during the Periyapurana period. Periya Purana is the twelfth of the twelve Saiva religious books. It was written using Sundarar's Thirutondar Puranam and Nambiandar Nambi's Thirutondar Thiruvanthadi as the first and second books respectively. In this book, Sekkizhar has recorded about thirty-four women including Karaikal Ammaiyar, Isai Gnaniyar, Mangaiyar Karasiyar, Thilagavathiyar, Siruthondar's wife Thiruvenkattu Nangai, and Thiru Neelakandar's wife. The women who lived in that time were acting according to the wishes of men in their lives. They have operated beyond their personal preferences for the family. There is nothing of their life incidents and desires were recorded. The article deciphers the life of women in Periyapuranam.*

**Keywords**: *Periyapuranam*, Thirumanam, Thandaikal, Psychology, God, Bhakthi.

## References

[1] Rasamaanikkanar, M. *Pallavar Varalaaru*. Senbaga Pathippagam, 2015.
[2] Subramaniyan, N. *Sangakaala Vaazhviyal*. New Century Book House, Chennai, 2010.
[3] Selvaraj, A. *Purananooru*. New Century Book House, Chennai, 2024.
[4] Dhatchinamoorty, A. *Tamizhar Naagarigamum Panpaadum*. Ainthinai Pathippagam, 2021.
[5] Balaiya, A. P. *Periyapuranam Moolamum Uraiyum*. 2019.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# பெரியபுராணம் காட்டும் மகளிர் வாழ்வியல்

**முனைவர் மு. விஜய சாரதா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-8858 -5853
DOI: 10.5281/zenodo.14752710

**ஆய்வுச் சுருக்கம்**

*பெரியபுராணம் எழுதப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு காணும் அக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் வாழ்வில் தான் திருமணம் செய்த ஆணின் விருப்பத்திற்கு இணங்க செயல்பட்டு இருக்கின்றனர்.அவர்களுக்கென்று தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்படடே இயங்கியுள்ளனர். அவர்களின் உளவியல் சார்ந்த எதுவும் பதிவு செய்யப்படவில்லை. கணவனுக்கும் சிவனடியாருக்கும் வேண்டுவனவற்றை செய்வதே கடனாகக் கொண்டுள்ளனர். அதனைச் செய்ய தவறும் போது எத்தகைய தண்டனைக்கும் உள்ளாக்கப் பட்டி ருக்கின்றனர்.*

**குறிப்புச்சொற்கள்:** *பெரியபுராணம்*, திருமணம், தண்டைகள், உளவியல், இறைவன், பக்தி.

## முன்னுரை

பக்தி இலக்கியங்கள் அனைத்தும் இறைவனின் புகழைப் பாட, பெரியபுராணம் மட்டும் இறைவன் மீது பக்தி கொண்டவர்களின் பக்திச் சிறப்பினைப் பாடுகிறது. அடியவர்கள் இறைவன் மேல் கொண்ட அன்பையும் அந்த அன்பைப் புலப்படுத்த எத்தகைய எல்லைக்கும் அவர்கள் சென்றதையும் பெரியபுராணம் நமக்குத் திரையிட்டுக் காட்டுகிறது. எத்தகைய எல்லைக்கும் என்னும் சொல்லின் பொருளை இவ்விடத்தில் மேம்போக்காக கொள்வோமேயானால் கள ஆய்வு செய்து எழுதப்பட்ட பெரியபுராண கால பெண்களின் வாழ்வியலை அறிவதில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

## பெரியபுராணமும் பெண்களும்

சைவ சமயத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பன்னிரண்டாவதாகத் திகழ்வது பெரியபுராணம். சுந்தரரின் திருத்தொண்டர் தொகையையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் முறையே முதல்,வழி நூலாகக் கொண்டு எழுதப்பட்டது . இந்நூலில் காரைக்கால் அம்மையார், இசை ஞானியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் , சிறுத்தொண்டரின் மனைவி திருவெண்காட்டு நங்கை, திரு நீலகண்டரின் மனைவியார் உள்ளிட்ட முப்பத்து நான்கு மகளிர் பற்றி சேக்கிழார் பதிவு செய்துள்ளார்.

## இசைஞானியார்:

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

சுந்தரரின் தாயான இசைஞானியார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக நம்பியாண்டார் நம்பியால் சேர்க்கப்பட்டவர். இவரைப் பற்றியத் தொன்மங்கள் வழி இவர் சிவ பக்தர் என்பது அறியப்பட்டாலும் சுந்தரர் என்னும் பெறுதற்கரிய மகனைப் பெற்றதால் பெரும்பேறு பெற்றவர்.இதனை "ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்;அழியாப் புரங்கள் எய்து அழித்தார் ஆண்ட நம்பி தனைப் பயந்தார்;இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என் சிறுபுன்மொழியால் புகழ முடியுமோ ? முடியாது; எவர்க்கும் முடியாது ஆல்" (பெரியபுராணம்)என்று சேக்கிழார் மொழி வழி அறியலாம். "ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும்" (திருக்குறள், பா69) என்னும் அடிகளுக்கிணங்க சுந்தரர் போன்ற மகனை உலகிற்கு ஈந்த பேறால் புகழப் பெற்றார்.

**தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை**:

மானி என்னும் இயற்பெயர் கொண்ட இவர் சமய முதற்குரவரான சம்பந்தர் பெருமானால் மங்கையர்க்கரசி என்று போற்றப்பெற்றவர். அதனால் சேக்கிழாரடிகளால் மங்கையர்க்குத் தனியரசி,தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை எனப்பட்டவர். தன் கணவன் நின்ற சீர் நெடுமாறன் மன்னனாகவே இருந்த போதும் அவன் சமணம் சார்ந்து சைவம் மறந்த வேளையில் அவனை நேர்வழிக்குக் கொண்டு சென்றவர். மன்னன் மனைவி எனினும் தன் குலத்திற்கு வந்த பழியைத் துடைக்கப் பெண்கள் முயன்றமையை உணரலாம்.

**தண்டனைகள்**

பெண்களுக்குக் கொடுக்கபட்ட தண்டனைகள் பற்றியும் அறிவதற்கு இத்திருமுறை துணை புரிகிறது. பல்லவ மன்னரான மூன்றாம் நந்திவர்மனே, கழற்சிங்க நாயனார் என்று ராசமாணிக்கனாரால் (பல்லவர் வரலாறு,ப.184) நூலில் கூறப்பட்டுள்ளவர். அவரின் மனைவியான பட்டத்தரசியுடன் கோவிலுக்கு செல்லும் போது சிவனுக்கு பூசைக்காக வைத்திருந்த பூவினை முகர்ந்தமைக்காக செருத்துணையார் அவரின் மூக்கினை அறிந்தெறிகிறார். இதனை 'கதும்' என ஓடிச்சென்று, கருவி கைக் கொண்டு பற்றி, மதுமலர்த் திருஒப்பாள் தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார்" (பெரியபுராணம்) என்று சேக்கிழார் கூறுவதன் வாயிலாக காணமுடிகிறது. இதோடு நில்லாமல் கழற்சிங்கரும் பூவை முகர்ந்த தன் மனைவியின் மூக்கை அறிந்தது போதாதென்று வலியால் துடிக்கும் மனைவியென்றும் பாராமல் பூவை எடுத்த கையை வெட்டி வீழ்த்தினார் என்றும் அறிய நேருகிறது. "மட்டு அவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தார் அன்றே. உரை ஒரு தனித் தேவி செங்கை உடைவாளால் துணித்த போது" (பெரியபுராணம்) என்று பதிவு செய்கிறார் சேக்கிழார். கலிக்கம்ப நாயனாரின் மனைவியாரும் தன் வீட்டிற்கு வந்த சிவனடியார் முன்பு தன்னிடம் ஏவல் கேட்காமல் சென்ற பணியாள் என்று அந்தச் சிவனடியாருக்குப் பணிவிடை செய்ய காலம் தாழ்த்தியமையால் அவரின் கையை கலிகம்பர் வெட்டியதும் இதற்கு வலு சேர்க்கிறது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**பெண்கள் சூளுரைத்தல்**

திருநீலகண்டக்குயவனார்என்பவர் சிவத்தொண்டு செய்பவர். இருப்பினும் பரத்தையரிடம் சென்று இன்பம் துய்ப்பவர் . இது தெரிந்து தன்னிடம் கோபம் கொண்டு தன் மனைவி உடனுறைவுக்கு உடன்படாமல் இருக்க திருநீலகண்டக்குயவனாரோ அவரை வலுவில் அடைய முயன்றார். இதனால் அருந்ததிக் கற்பின் மிக்க அவரின் மனைவி கோபம் கொண்டு "தீண்டுவீர் ஆயின் எம்மைத் திரு நீல கண்டம்" (பெரியபுராணம்) சூளுரைக்கிறார். இந்த சூளுரைக்குக் கட்டுப்பட்டு அது முதற் கொண்டு அவரைத் தீண்டத் துணியாதவரானார்.

**பெயர் - சூளுரை செய்தல்**

சூளுரை செய்யும் போது தனக்குப் பிடித்தவர்கள் அல்லது மதிப்பிற்குறியவர்கள் பெயரைக் கூறி அவர்கள் மேல் சூளுரைப்பதும், மன்னர்கள் தம்மிடம் அடிபணியாத பகைவரை அழிப்பேன் என்றும் அவ்வாறு அழிக்காவிட்டால் எனக்கு இவ்வாறு நேரட்டும் என்று கூறுவதும் புதிதல்ல. புறநானூற்றில் பாண்டியன்தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அரியணை ஏறிய இளம் வயதில் பகைவர் எழுவர் அவனுடைய இளமையை இகழ்ந்து படையெடுக்கின்றனர். அப்போது அவன் சினந்தெழுந்து பகைவர் சிதறியோட அவர்கள் முரசைக் கைப்பற்றுவேன். இல்லையாயின் "குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!மாங்குடி மருதன் தலைவன்ஆக,உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைக, என் நிலவரை" (புறம், பா. 72) என்கிறான். இவ்வாறு செய்வது அக்காலத்திலிருந்து இக்காலம் வரை தொடர்ந்து வரும் நம்பிக்கை சார்ந்ததொரு பண்பாடு. தன்னைத் தீண்டக் கூடாதுஎன்பதற்காக நீலகண்டம் என்று கூறுகிறார் நீலகண்டரின் மனைவியார். தன் கணவனின் பெயரும் நீலகண்டன் என்பதாலும் இறைவனின் பெயரும்நீலகண்டன் என்பதாலும் எவருடைய பெயரைக் குறிப்பிட்டார் என்பது தெளிவாகப் புலப்படவில்லை. கணவரின் பெயரைச் சொல்லி அழைக்கும் முறை அக்காலத்தில் வழங்கப்படாமையாலும் தன் கணவன் அதீத பக்தி கொண்ட இறைவனான திருநீலகண்டரின் பெயராகவே இருக்கலாம் என்பது துணிவு.

**திருமணத்திற்கு முன்னரே கைம்மை**

திருவாமூரைச் சேர்ந்த புகழனார் மாதினியாருக்குப் பிறந்தவர்கள் திலகவதியார், திருநாவுக்கரசர். திலகவதியாருக்கு கலிப்பகையார் என்னும் பெயருடையவருக்கும் திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அப்போது புகழனாரும் மாதினியாரும் ஒருவர் பின் ஒருவராக இறக்கின்றனர். போர்க்களத்திற்குச் சென்ற கலிப்பகையாரும் இறக்க அதனைச் சேக்கிழார் "மருவார்மேல் மன்னவற்காய் மலையப் போம்கலிப்பகையார்பொருவாரும் போர்க் களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டார்" (பெரியபுராணம்) என்று பாடுகிறார். தனக்கு மணம் பேசி முடித்த கலிப்பகையாரின் இறப்பைத் தன் கணவரின் இறப்பாகவே கருதித் தாமும் உயிர்விடத் துணிந்தமையும்கண்டு "வெம் முனை மேல் கலிப்பகையார் வேல் வேந்தன் ஏவப் போய்அம்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

முனையில் பகை முருக்கி அமர் உலகம் ஆள்வதற்குத்தம் உடைய கடன் கழித்த பெரு வார்த்தை தலம் சாற்றச்செம் மலர் மேல் திரு அனைய திலகவதியார் கேட்டார்" (பெரியபுராணம்) என்று கூறுகிறார் ஆசிரியர். இதன் மூலம்திருமணம் நடவாவிடினும் தனக்கு மன பேசி உறுதி செய்யப்பட்ட ஆணை,பெண்கள் தன் கணவனாகவே எண்ணும் உயர்வான வாழ்வியல் நமக்குத் தெளிவாகிறது. "ஒரு பெண் ஆண்மகனை உள்ளத்தில் வரித்துவிட்டால் அப்போதே கற்பு தொடங்கி விடுகிறது. அக்கணமே அவனைத் தன் நாயகனாகக் கருதத் தொடங்குவாள்" (சங்ககால வாழ்வியல்,ப. 376 ) என்று பேராசிரியர் ந. சுப்பிரமணியன் கூறுகிறார்.

**பன்னிரண்டு– திருமண வயது**

பெண்களுக்கான திருமண வயது பன்னிரண்டு என்பது பெரிய புராணம் வழி அறியக் கிடைக்கின்ற மற்றொரு செய்தி ஆகும். "அந் நாளில் திலகவதியாருக்கு ஆண்டு ஆறு இரண்டின்" (பெரியபுராணம்) என்பதன் மூலம் பன்னிரண்டு வயதான திலகவதியாருக்குத் திருமணம் பேசி முடித்தனர் அவர் பெற்றோர் என்று கூறுவதிலிருந்து ஐயமின்றித் தெளிவாகிறது.

**பெண்களும் கோயில் திருப்பணிகளும்**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் சில நாயன்மார்களின் மனைவியர் தன் கணவனின் சிவத் தொண்டினுக்கு உதவியமை நாம் தெளிந்த ஒன்று. ஆனால் பெண்கள் கோயில் திருப்பணிகளில் இளம் வயதிலேயே ஈடுபாடு கொண்டு தொண்டு செய்தமையைத் திலகவதியார் வரலாறு வழி பெரியபுராணம் பதிவு செய்துள்ளது. போர்களத்தில் தன் கணவனாக வரவிருந்தவரை இழந்த திலகவதியார் திருக்கோயில் பணிகளில் தன்னை அர்பணித்தார். பொழுது விடிவதற்குமுன் திருமுன்றிலிலே திருவலகிடுதலாகிய திருப்பணிசெய்தும், கன்று ஈனாத நன்மை மிக்க பசுவின் சாணத்தினால் நன்கு திருமெழுக்கிட்டும், பூக்களைக் கொய்து கொண்டுவந்து மாலைகள் தொடுத்துக் கொடுத்தும் அன்பர்கள் பலரும் பாராட்டும்படியாக பல திருப்பணிகளையும் செய்தார். "பணி மாறிப் புனிறு அகன்றநலம் மலி ஆன் சாணத்தால் நன்கு திரு மெழுகு இட்டுமலர் கொய்து கொடு வந்து மாலைகளும் தொடுத்து அமைத்துப்பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார்" (பெரியபுராணம்) என்று இதனைப் பாடுகிறார் சேக்கிழார். பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி இதனையே "பெண்கள் பலர் சமயத் தொண்டாற்றினர். புனிதவதியாரும் ஆண்டாள் நாச்சியாரும் திலகவதியாரும் மங்கையற்கரசியாரும் இறைபணி செய்து ஈடேறினர்" என்று கூறுகிறார் (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 471).

**வண்டல் விளையாட்டு**

பெண்கள் விளையாடும் வண்டல் விளையாட்டுப் பற்றியும் நம்மால் பெரிய புராணத்தைக் கொண்டு அறிய முடியும். "வண்டல் இழைத்தல் என்பது ஒரு வகை விளையாட்டாகும். மணலால் பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழும் விளையாட்டிது"

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்கிறார்அ.தட்சிணாமூர்த்தி (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.152). புனிதவதியார் வளரும் பருவத்தில் சிவனையே நினைந்து வளர்ந்தார் என்பதை "வண்டல் பயில்வன எல்லாம் வளர் மதியம் புனைந்த சடைஅண்டர் பிரான் திரு வார்த்தை அணைய வருவன பயின்று" (பெரியபுராணம்) என்று விளக்குகிறார்.

**உறுப்பு நூலவர்**

பெண்களின் திருமணத்தை உடல் கூற்று நூல் வல்லுனர்கள் கூறியது போன்று உறுப்புகள் முழுமையும் வளரப் பெற்ற பின் நிகழ்த்தியமையை காண முடிகிறது . புனிதவதியாரின் திருமணத்தை அவரது தந்தை "நல்ல என உறுப்பு நூலவர் உரைக்கும் நலம் நிரம்பிமல்கு பெரு வனப்பு மீக் கூர" (பெரியபுராணம்)பின் முடிவு செய்ததை அறிய முடிகிறது .

**இல் இகவாப் பருவம்**

ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குப் பின் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத காலமும் இருந்திருக்கிறது என்பதையும் புனிதவதியார் வாழ்க்கை வரலாற்றில் காண முடிகிறது.அழகு பெருகியதால் தன் மகளை வீட்டை விட்டு வெளியே அனுப்ப முடியாத சூழலை "மல்கு பெரு வனப்பு மீக் கூர வரு மாட்சியினால்இல் இகவாப் பருவத்தில்" (பெரியபுராணம்) எனக் கூறுகின்றார்.

**பெண் வீட்டில் திருமணம்**

எல்லாக் காலத்திலும்திருமணங்கள் பெரும்பான்மையும் பெண்வீட்டில் தான் நடை பெற்று இருக்கின்றன.மாப்பிள்ளையை அலங்காரம் செய்து பெண் வீட்டிற்கு அழைத்து வந்தமையை "இணர் அலங்கல் மைந்தனையும் மண அணியின் எழில் விளக்கிப்பணை முரசம் எழுந்து ஆர்ப்பக் காரைக்கால் பதி புகுந்தார்.அளி மிடை தார்த் தன தத்தன் அணி மாடத்து உள் புகுந்து" (பெரியபுராணம்) என்பதன் வாயிலாக அறியலாம்.

**பெயரும் பெண் தெய்வமும்**

பெண் குழந்தைக்குப் பெண் தெய்வத்தின் பெயரை வைக்கும் பழக்கத்தை புனிதவதியாரின் வாழ்க்கை வழியாக அறிய முடிகிறது. பரமதத்தன் தன் முதல் மனைவியின் பெயரை தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு வைத்ததை ''நற் பெருந்தெய்வம் ஆதல் நான் அறிந்து அகன்ற பின்புபெற்ற இம் மகவு தன்னைப் பேர் இட்டேன்"(பெரியபுராணம்)என்று கூறுவதிலிருந்து தெளிய முடிகிறது.

**உணவு கடன் பெறுதல்**

சிவனடியாருக்கு அமுது இட ஒன்றும் சமைக்ககாத போது புனிதவதியார் தன் கணவனுக்கு என்று வைத்திருந்த மாம்பழத்தையே சிவனடியாருக்குப் படைத்தார். ஆனால் வறுமையின் காரணமாக அடியாருக்கு அமுது இட ஒன்றும் இலாத போது இளையான்குடி மாற நாயனார் தன் மனைவியிடம் என்ன இருக்கிறது உணவிட என்று கேட்கிறார். அதற்கு அவரின் மனைவியார் ''மற்று ஒன்றும் காண்கிலேன்; ஏதிலாரும் இனித் தருவார் இல்லை; போதும்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

வைகிற்றுப் போம் இடம் வேறு இலை" (பெரியபுராணம்) என்று கூறுவதிலிருந்து உணவு பொருட்களை அக்கம் பக்கம் உள்ளவரிடம் கடன் பெறுவதும் அதையும் மாலை நேரம் ஆனால் சென்று கேட்க முடியாத சூழலும் நிலவியதை காண முடிகிறது. அதோடு அன்றி இயற்பகை நாயனார் இயற்கைக்கு மாறாகத் தன் மனைவியைச் சிவனடியாருடன் வாழ அனுப்புதல், பெற்ற தாயிடமே அவளின் பிள்ளையைக் கறி உணவாகக் கேட்டல், தன் கணவன் மறுமணம் செய்து கொண்டமையால் தன் அழகிய உருவம் வேண்டாம் என பேயுறு வேண்டுதல் போன்ற உளவியல் ரீதியான வாழ்வியல் செய்திகளையும் நம்மால் கண்டு கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

இலக்கியங்கள் எப்போதும் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யத் தவறியதே இல்லை. அவை அவ்வகை இலக்கியமாக இருப்பினும் உரைநூல்களாக இருப்பினும் அந்தந்த காலத்தைத் தெளிவாக நமக்குப் புலப்படுத்துகின்றன. அந்த வகையில் பெரியபுராணமும் செம்மையாகவே காட்டியிருக்கிறது. பெண்களைப்பற்றி முழுமையான பெயர்களுடன் பதிவு செய்யாமல் ஆண்களின் பெயரை மட்டும் கூறி அவர்களுக்குத் துணை நின்ற பெண்களை மனைவியர் என்று கூறி எழுதப்பட்டுள்ளது. சொற்பமான பெண்களை மட்டும் கூறியுள்ள இந்நூலின் வழி அக்காலப் பெண்களின் வாழ்க்கைச் சூழலையும் அவர்களுக்கு நேர்ந்த சிக்கல்களையும் தெளிவாகக் காண பெரியபுராணம் நமக்குத் துணைபுரிகிறது. அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடிய தண்டனைகள், திருமண முறைகள், பெண்கள் கொண்ட சூளுரைகள் போன்றவற்றையும் அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

[1] இராசமாணிக்கனார், ம. பல்லவர் வரலாறு. செண்பகா பதிப்பகம், 2015.
[2] சுப்பிரமணியன், ந. *சங்ககால வாழ்வியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
[3] செல்வராசு, அ. *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[4] தட்சிணாமூர்த்தி. அ. *தமிழர் நாகரிகமும் பண்பாடும்*. ஐந்திணை பதிப்பகம், 2021.
[5] பாலையா, அ. ப , (ப . ஆ) *பெரியபுராணம் மூலமும் உரையும்*. ப. 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.